DINAMALAR

27 MAY 2022

PAGE 15

# பல்கலை.,யில் ஐந்தாண்டு படிப்புக்கு 81 ஆயிரம் மாணவர்கள் விண்ணப்பம்

**புதுச்சேரி, மே 27–**

புதுச்சேரி பல்கலைக்கழகத்தில், ஒருங்கிணைந்த ஐந்தாண்டு படிப்புகளுக்கு, கியூட் தேர்வு எழுத 81 ஆயிரம் மாணவ மாணவிகள் விண்ணப்பித்து உள்ளனர்.

காலாப்பட்டில் உள்ள மத்திய பல்கலைக் கழகத்தில் ஒருங்கிணைந்த ஐந்தாண்டு பட்டப் படிப்புகளில் 10 பாடப்பிரிவுகளுக்கு, இந்தாண்டு 'கியூட்' பொது நுழைவுத் தேர்வு அடிப்படையில் சேர்க்கை நடைபெற உள்ளது.

எம்.எஸ்சி., மற்றும் எம்.ஏ., ஐந்தாண்டு படிப்புகள் உள்ளிட்ட படிப்புகளுக்கு கடந்த 6ம் தேதி முதல்https://cuet.samarth.ac.inஎன்ற இணையதளத்தில் 22ம் தேதி வரை விண்ணப்பம் பெறப்பட்டது. விண்ணப்பத்தில் தவறுகளை திருத்தம் செய்ய, வரும் 31ம் தேதி வரை கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

இப் பல்கலைக்கழகத்தில் உள்ள ஒருங்கிணைந்த 5 ஆண்டு படிப்புகளுக்கு 'கியூட்' தேர்வு எழுத, நாடு முழுவதிலும் இருந்து 81 ஆயிரம் மாணவ, மாணவிகள் விண்ணப்பித்து மலைக்க வைத்துள்ளனர்.

**முதுநிலை, டிப்ளமோ**

புதுச்சேரி பல்கலைக்கழகத்தில் முதுநிலை மற்றும் டிப்ளமோ படிப்புகள்ளும், தேசிய தேர்வு முகமை நடத்தும் 'கியூட்' தேர்வு மூலம் நிரப்பப்பட உள்ளது.

மாணவர்கள்https://cuet.nta.inஎன்ற இணையதளத்தில் அடுத்த மாதம் 18ம் தேதி இரவு 11.50 மணி வரை விண்ணப்பிக்கலாம்.

தகவல் குறிப்பேட்டினை **www.pondiuni.edu.in**என்ற இணையதளத்தில் டவுண்லோடு செய்து கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

THE HINDU TAMIL

27 MAY 2022

PAGE 5

க்யூட்-யூஜி நுழைவுத்தேர்வு

# மே. 31 வரை விண்ணப்பத்தில் தகவல்களை திருத்தலாம்

**புதுச்சேரி**

புதுச்சேரி மத்திய பல்கலைக் கழகம் வழங்கும் 5 ஆண்டு ஒருங்கிணைந்த முதுநிலைப் படிப்புகளுக்கான சேர்க்கையானது தேசிய தேர்வு முகமையால் நடத்தப்படும் என்று ஏற்கெனவே அறிவிக்கப்பட்டது. பொதுப் பல்கலைக்கழக நுழைவுத்தேர்வு க்யூட்-யூஜி (CUET-UG) 2022-ஐ அடிப்படையாகக் கொண்டு நடைபெறுவதில் பங்கேற்க மே 22-ம் தேதிக்குள் விண்ணப்பிக்க வேண்டும் என்று அறிவிக்கப்பட்டது. புதுச்சேரி மத்திய பல்கலைக்கழகத்தில் 10 ஒருங்கிணைந்த முதுநிலைப் படிப்புகளுக்கு 81 ஆயிரம் பேர் விண்ணப்பம் செய்துள்ளனர்.

விண்ணப்பித்தோர் தங்கள் தகவல்களை திருத்திக்கொள்ளலாம். அதற்கான சாளரத்தை தேசிய தேர்வு முகமை நேற்று திறந்துள்ளது. வரும் 31-ம் தேதி வரை தங்கள் தகவல்களில் திருத்தம் செய்து கொள்ளலாம்.

"DINAKARAN"

PAGE NO: 06

DATE: 27.05.2022

# கியூட்-யூஜி தேர்வுக்கு விண்ணப்பித்தோருக்கு கால அவகாசம்

## புதுவை பல்கலைக்கழகம் தகவல்

புதுச்சேரி, மே 27: புதுச்சேரி பல்கலைக்கழகத்தில் கியூட்-யூஜி தேர்வுக்கு விண்ணப்பித்தோர் தங்களது தகவல்களை வரும் 31ம் தேதி வரை திருத்தம் செய்து கொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக புதுச்சேரி பல்கலைக்கழக உதவி பதிவாளர் மகேஷ் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

புதுச்சேரி மத்திய பல்கலைக்கழகம் வழங்கும் 5 ஆண்டு ஒருங்கிணைந்த முதுநிலை படிப்புகளுக்கான சேர்க்கையானது தேசிய தேர்வு முகமையால் நடத்தப்படும் என்று ஏற்கனவே அறிவிக்கப்பட்டது. பொது பல்கலைக்கழக நுழைவு தேர்வு கியூட்-யூஜி 2022-ஐ அடிப்படையாக கொண்டு நடைபெறுவதில் பங்கேற்க வரும் மே 22ம் தேதிக்குள் விண்ணப்பிக்க வேண்டும் என்று அறிவிக்கப்பட்டது.

புதுச்சேரி மத்திய பல்கலைக்கழகத்தில் 10 ஒருங்கிணைந்த முதுநிலை படிப்புகளுக்கு 81 ஆயிரம் பேர் விண்ணப்பித்துள்ளனர். விண்ணப்பித்தோர் தங்கள் தகவல்களை திருத்திக்கொள்ளலாம். அதற்கான திருத்த சாளரத்தை தேசிய தேர்வு முகமை 25ம் தேதி முதல் திறந்துள்ளது. வரும் 31ம் தேதி வரை தங்கள் தகவல்களில் திருத்தம் செய்துகொள்ளலாம். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.